# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No. 53/2024

dated : 05.08.2025

P.W.1

Name கிருஷ்ணம்மாள் என்ற ராஜலட்சுமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>92 மற்றும் 93 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பிறந்து வளர்ந்தது ஊத்துமலை. 3ம் பிரதிவாதி என் உடன் பிறந்த சகோதரி. 1, 2 பிரதிவாதிகள் என் சகோதரர்கள். கிருஷ்ணம்மாள் என் தாயாருடன் பிறந்த சகோதரி. 4, 5 பிரதிவாதிகள் கிருஷ்ணம்மாளின் மக்கள். நாங்கள் மருதப்ப சேவையின் வம்சாவழியினர் என்றால் சரிதான். மேற்படி மருதப்ப சேவைக்கு ஊத்துமலை ஜமின்தாருக்கு இணையான சொத்துக்கள் இருந்தது. மருதப்பன் சேர்வைக்கு நிறைகுளத்தான், நவநீதகிருஷ்ணன் மருதப்பன், சின்ன கிருஷ்ணன் என்ற மூன்று மக்கள் மற்றும் இரண்டு பெண் மக்கள் கிருஷ்ணம்மாள், மாடத்தி என ஐந்து மக்கள். நிறைகுளத்தானுக்கு ஆண் வாரிசுகள் இல்லை. நவநீதகிருஷ்ணன் மருதப்பன் சேர்வை இருக்கும்போதே அவரது சகோதரர்கள் நிறைகுளத்தான் மற்றும் சின்னகிருஷ்ணன் இறந்துபோனார்கள் என்றால் சரிதான். நவநீதகிருஷ்ணன் மருதப்பன் சேர்வைக்கு குழந்தைகள் இல்லை. சின்ன கிருஷ்ணனுக்கும் குழந்தைகள் இல்லை. மேற்படி நபர்கள் இறக்கும்போது அப்போது நிலவி வந்த இந்து

வாரிசுரிமை சட்டப்படி நவநீதகிருஷ்ணன் மருதப்பன் சேர்வை மட்டும்தான் ஒரே ஆண் வாரிசாக இருந்து வந்தார். எனவே ஆண் வாரிசு உரிமை என்ற அடிப்படையில் அவருக்கு மட்டும்தான் பாத்தியப்பட்டது என்றால் நிறைகுளத்தானுக்கு பெண் குழந்தை இருந்தது. நவநீதகிருஷ்ணன் மருதப்பன் சேர்வை ஆயுள் காலத்திலேயே மாடத்தியம்மாளின் மகனான மற்றொரு நவநீதகிருஷ்ணன் மருதப்பன் சேர்வைக்கு 15.08.1942 ல் பதிவு செய்த உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு உயில் ஆவணத்தில் குறிப்பிட்ட நவநீதகிருஷ்ணன் மருதப்பன் சேர்வை என்பவர் என் தந்தை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளும் நானும் அவரது வாரிசுகள் என்றால் சரிதான். மூத்த நவநீதகிருஷ்ணன் மருதப்பன் சேர்வை என்பவர் 1950 கால கட்டத்தில் இறந்துபோனார் என்றால் சரிதான். எனவே மூத்த நவநீதகிருஷ்ணன் மருதப்பன் சேர்வை எழுதி வைத்த உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா உயிருடன் இருக்கும்போதே என் சகோதரர்களுடன் 30.09.1970 ம் தேதி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதிக் கொண்டார் என்றால் அதபற்றியும் எனக்கு தெரியாது. எனக்கும் 3 ம் பிரதிவாதிக்கும் நாளது தேதி வரை விரோதம் ஏதும் இல்லை நல்ல உறவு முறையில்தான் உள்ளோம். 3 ம் பிரதிவாதி OS-580/2006 என்ற வழக்கை தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அவருக்கும் எனக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் தலா 1/4 பாகம் உள்ளது என்றும் ஸ்ரீராம் EPC பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் மீதும்

மின்வாரியத்தின் மீதும் ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் என் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்தேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் என் சகோதரர்களும் ஆஜராகி எதிர் வாதம் செய்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எதிர்வாதம் செய்து வந்த நிலையில் என் சகோதரி கோரிய விளம்புகை பரிகாரம் கிடைக்காது என்று தெரிந்த பின்னர் 3ம் பிரதிவாதி அந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி வாதியாக இருந்து இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் எதிராக இந்தியன் ஆயில் கார்ப்ரேஷன் நிறுவனத்திற்கும் எதிராக OS-179/2006 என்ற வழக்கும் தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கிலும் நான் என் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வாதம் செய்திருந்தேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கிலும் என் சகோதரிக்கும் எனக்கும் எந்த பாகமும் கிடையாது என்று முடிவானது என்றால் சரியல்ல. என் தாயாருடன் பிறந்த சகோதரி கிருஷ்ணம்மாள் என்பவர் குடும்பச் சொத்துக்களில் பாகம் கோரி திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கானது அதிகார வரம்பு காரணமாக தென்காசி முதன்மை சார் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு தென்காசி சார் நீதிமன்றத்தில் OS -98/2010 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. அந்த வழக்கில் 3ம் பிரதிவாதிக்கும் எனக்கு சேர்த்து ஒரே வழக்கறிஞர் ஆஜராகியிருந்தார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி சுப்பம்மாளும் ஒரு தரப்பினர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கும் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் வழக்கை தாக்கல் செய்த கிருஷ்ணம்மாள், சுப்பம்மாள் என்பவருக்கும் எந்த உரிமையும் இல்லை என தள்ளுபடி ஆனாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கின் தீர்ப்பை எதிரித்து தொடரப்பட்டு மேல்முறையீட்டு வழக்கு எண்.14/2014 வழக்கின் தென்காசி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 11.09.2017 அன்று தள்ளுபடி ஆனாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட அனைத்து வழக்குகளிலும் எனக்கு அழைப்பாணை வரப்பெற்று நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வாதம் செய்து வந்த நிலையில் தற்போது இவ்வழக்கிற்காக வேண்டுமென்றே முந்தைய வழக்கு நடவடிக்கைகள் பற்றி தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முந்தைய வழக்கு நடவடிக்கைகள் அனைத்தையும் என் சகோதரர்கள் என் தந்தைக்கு எழுதி வைத்த உயில் பற்றியும் பாகப்பிரிவினை பற்றியும் எதிர்வாதம் செய்து ஆவணங்களை தாக்கல் செய்து நடத்தி வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 92, 93 பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது நானும் வழக்கறிஞரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. அதனால் அவர்களது எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள விவரங்களை என்னால்

மறுக்க இயலாது என்றால் சரிதான். எனவே எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 92, 93 பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் கூறப்பட்டுள்ள விவரங்களை மறுத்து தெரிவிக்கப்பட்ட சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் வழக்குரை சொத்துக்களை வில்லங்கம் மற்றும் பாராதீனம் செய்து அனுபவித்துள்ளார்கள் என்று வழக்குரையில் கூறியுள்ளேன். நானும், என் சகோதரியும் மேல மருதப்பபுரம் கிராமத்தில் உள்ள 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை மேல மருதப்பபுரம் கிராமத்திலிருந்து புல எண்.430 ல் 10 ஏக்கர் 92 செண்ட் 9 ஏக்கர் 56 செண்டை கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் மருதையா மற்றும் நிறைகுளத்தான் (1, 2 பிரதிவாதிகளுக்கு) பாத்தியப்பட்டது என ஒப்புக்கொண்டு கிரையம் பெற்றுக் கொண்டு தற்போது அதனை மறுப்பதற்கு தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணம்மாள் இறந்த பின்னர் மேல்முறையீட்டு எண். 14/2014 வழக்கை அவரது வாரிசுகளான இவ்வழக்கின் 4, 5 பிரதிவாதிகள் தொடர்ச்சியாக மேல் நடத்தி வந்தனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதியின் வழக்கும் கிருஷ்ணம்மாள் மற்றும் அவரது வாரிசுகள் தொடர்ந்த வழக்குகளும் தள்ளுபடியான நிலையில் தற்போது என் மூலம் மற்றொரு சுற்று வழக்கு நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் சகோதரர்கள் 1, 2 பிரதிவாதிகள் ஆதிமுதலே எங்கள் பாக உரிமைகளை மறுத்து வருகிறார் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் உயிருடன் இருந்தபோதே இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு

முன்பு நான் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. நான் தாக்கல் செய்த இவ்வழக்கு ஏற்கனவே முடிவான முந்தைய வழக்கு தீர்ப்புகளுக்கு முரணாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பதால் இவ்வழக்கு முன்தீர்ப்பு தடை என்ற குறைபாட்டால் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. என் தந்தைக்குரிய உயில் ஆவணம் மற்றும் என் தந்தை என் சகோதரர்களுடன் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் ஆகியவற்றின் அடிப்படையில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று தெரிந்தபின்னரும் 3ம் பிரதிவாதி மூலம் பல வழக்குகளை நடத்தி வந்து அவற்றில் தோல்வியடைந்த பின்னர் 4, 5 பிரதிவாதிகளின் தாயார் சின்ன கிருஷ்ணம்மாளை வைத்து மற்றொரு சுற்று வழக்கு நடவடிக்கைகளை துவக்கி அதிலும் தோல்வியடைந்த பின்னர் என் மூலம் மீண்டும் ஒரு சுற்று நடவடிக்கை துவக்கியுள்ளேன் என்றும் நானும், 3 முதல் 5 பிரதிவாதிகளும் ஒன்று சேர்ந்து வீண் பிரச்சனைகளை ஏற்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வழக்கு தொடர்ந்த காலத்திலும் சின்ன கிருஷ்ணம்மாள் வழக்கு தொடர்ந்த காலத்திலும் அதற்கு முன்பிருந்தே என் சகோதரர்கள் சொத்துக்களில் வில்லங்க பாராதீனம் செய்து வந்த காலத்திலும் எனக்கான வழக்குமூலம் எழுந்துவிட்டது என்றும் ஆனால் அதனை பயன்படுத்தாமல் உரிய காலத்திற்குள் வழக்கு தொடராமல் கால பிற்பாடாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு கால வரம்பினால் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. 2 பிரதிவாதி இறந்த பின்னர் அவரது வாரிசுகளான 92, 93 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதி மீது பாகப்பிரிவினை கோரி வழக்கு

தொடர்ந்து அதில் ஏற்பட்ட சமரசத்தின்படி பிரித்துக் கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு OS-27/2016 என முதன்மை சார்பு நீதிமன்றத்தில் முடிவானது என்றால் அதுவும் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்த காலத்திலேயே அவருடைய சொத்துக்கள் தம்பி மகள் 93 ம் பிரதிவாதிக்கு சேரும் வகையில் உயில் ஆவணம் எழுதி வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 30.01.2022 ல் மருதையா இறந்துபோனார் என்றால் தேதி ஞாபகமில்லை. அவர் இறந்தபின்னர் 07.11.2021 ம் தேதியிட்ட உயில் நடைமுறைக்கு வந்து அவரது பங்கு சொத்தை 93 ம் பிரதிவாதி அடைந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனவே திருத்தப்பட்ட வழக்குரையின்படி 1 ம் பிரதிவாதியின் பங்கு சொத்துக்களும் எனக்கு கிடைக்கததக்கது என்று கூறுவதும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சுப்பம்மாள் எழுதி வைத்ததாக கூறப்படும் 14.10.2009 ம் தேதிய உயில் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சுப்பம்மாளுக்கே உயில் மீது உரிமையில்லாத போது அவர் உயில் ஆவணம் எழுதி வைக்க இயலாது என்றும் அந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த சொத்துரிமை மாற்றமும் நிகழாது என்றால் சரியல்ல. ஏற்கனவே நடந்த வழக்குகளில் சுப்பம்மாளுக்கு சொத்துரிமை ஏதும் இல்லை என்ற முடிவான நிலையில் அவர் உயில் ஆவணம் எழுதி வைக்க உரிமையற்றவர் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் எங்களுக்கு தெரியவே சட்ட காலத்திற்கும் மேலாக தங்களுடைய தனிச் சொத்தாக எங்களை உடைமை நீக்கம் செய்து அனுபவித்து வந்ததால் வழக்கு சொத்தில் பங்குரிமை கோர இயலாது

என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றும் சொன்னால் சரியல்ல. என் சித்தி மக்களான 4, 5 பிரதிவாதிகளிடம் விரோதம் ஏதும் இல்லை நல்ல முறையில்தான் பேசிக்கொள்வோம். 3 முதல் 5 பிரதிவாதிகள் இவ்வழக்கில் ஆஜராகி எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், அவர்களும் கூட்டாக சேர்ந்து இவ்வழக்கை நடத்தி வருவதால்தான் 3 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கில் ஆஜராகமாலும், எதிர்வாதம் செய்யாமலும் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் வழக்கு பிரதிவாதி செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**47 ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.**

**மேற்கண்ட குறுக்குவிசாரணையை தமதாக ஏற்றுக்கொண்டதாக கூறப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.05 18:26:38 +0530